கோட்டூர் பேரூ...

வழி:

**சுருக்கம்**

பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – திரு.ம.பிரகதீஷ் – கருணையடிப்படையில் வரித்தண்டலராக 23.11.2017 முற்பகல் முதல் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை**

**அரசாணை (3ப) எண்.04**

**நாள். 03.02.2020**
**(திருவள்ளுவர் ஆண்டு 2051**
**விகாரி, தை–20)**

14 FEB 2020

**படிக்கப்பட்டது:**

1. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.2397/2017/பே2, நாள்.17.11.2017.
2. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.9718/2018/அ9 நாள்.10.08.2018.
3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.

*****

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகளின்படி, கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் பேரூராட்சியில் வரித்தண்டலராகப் பணிபுரிந்தபோது 23.12.2014–ல் பணியிடைக் காலமான திருமதி.ரா.செல்வராணி என்பவரின் வாரிதாரரும் மகனுமாகிய திரு.ம.பிரகதீஷ் என்பவருக்கு கருணையடிப்படையில் வரித்தண்டலராக கோயம்புத்தூர் மாவட்டம், சமத்தூர் பேரூராட்சியில் பணி நியமனம் வழங்கப்பட்டு, 23.11.2017 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தனியரின் பணியினை அவர் வரித்தண்டலராக பணியில் சேர்ந்த நாளான 23.11.2017 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அரசினைக் கோரியுள்ளார்.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்படும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. மேற்காணும் சூழலில், கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் பேரூராட்சியில் வரித்தண்டலராகப் பணிபுரிந்தபோது 23.12.2014–ல் பணியிடைக் காலமான திருமதி.ரா.செல்வராணி என்பவரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையிலும் மற்றும் இது தொடர்பான ஆவணங்களைப் பரிசீலனை

செய்ததன் அடிப்படையிலும் காலஞ்சென்றவரின் வாரிசான திரு.ம.பிரகதீஷ் என்பவர் கோயம்புத்தூர் மாவட்டம், சமத்தூர் பேரூராட்சியில் கருணைபடிப்படையில் வரித்தண்டலராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்ட நிலையில், அவரது பணியினை பணியில் சேர்ந்த நாளான23.11.2017 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் நடைமுறையிலுள்ள விதிகளின்படி வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அதனைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார். இது தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண். 24772/ட்டி.1/2019, நாள் 27.12.2019 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறையின் அ.சா.எண். 43552/ஜி.2/2019, நாள் 22.01.2020–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஹர்மந்தர் சிங்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

பெறுநர்
திரு.ம.பிரகதீஷ், வரித்தண்டலர்,
சமத்தூர் பேரூராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம்.
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக).
பேரூராட்சிகளின் இயக்குநர்,
8வது தளம், நகர் நிர்வாக அலுவலக வளாகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–28.
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கோயம்புத்தூர் மண்டலம்,
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)
மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் மாவட்டம்.
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)

<u>நகல் :-</u>
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.2) துறை, சென்னை – 600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி.1) துறை, சென்னை – 600 009.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஜி.2)துறை, சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

3/2/2020
பிரிவு அலுவலர்

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்
அலுவலகம், கோயம்புத்தூர் மண்டலம்.

ந.க.எண்: 2397/2017/பேஉ நாள்: 13.03.2020

அனுப்பி வைக்கப்படுகிறது.

உண்மை நகல்

செயல் அலுவலர்
கோட்டூர் (சி.நி) பேரூராட்சி

பெறுநர்:
திரு. ம. பிரகதீஷ்,
வரித்தண்டலர், கோட்டூர் பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்
கோயம்புத்தூர் மண்டலம்
கோயம்புத்தூர் - 18.